# QB365 Question Bank Software Study Material

## புவியியல் - இந்தியா – வளங்கள் மற்றும் தொழிலகங்கள் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்(புத்தக & ஆக்கபூர்வமான வினாக்கள்)

## 10ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) வளத்தை வரையறுத்து அதன் வகைகளை குறிப்பிடுக.

**பதில் :** இயற்கையிலிருந்து பெறப்பட்டு உயிரினங்களால் பயன்படுத்தப்படும் அனைத்து வளங்களும் "இயற்கை வளம்" என்று அழைக்கப்படுகிறது.

**வகைகள்:**

1. புதுப்பிக்கக் கூடிய வளங்கள்
2. புதுப்பிக்க இயலா வளங்கள்

2) கனிமங்கள் மற்றும் அதன் வகைகள் யாவை?

**பதில் :** **கனிமங்கள்**

ஒரு குறிப்பிட்ட வேதியியல் மற்றும் இயற்பியல் பண்புகளைக் கொண்ட உயிருள்ள மற்றும் உயிரற்ற இயற்கை மூலங்கள் கனிமங்கள் ஆகும். இவை புவியிலிருந்து அகழ்ந்தெடுக்கப்படுகிறது.

**வகைகள்**

வேதியியல் மற்றும் இயற்பியல் பண்புகளின் அடிப்படையில் கனிமங்கள் இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. அவை,

i. உலோகக் கனிமங்கள்

ii. அலோகக் கனிமங்கள்

3) இயற்கை எரிவாயு என்றால் என்ன?

**பதில் :** 1. இயற்கை எரிவாயு என்பது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் அழிந்து புதையுண்ட தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் அதிக வெப்பம் மற்றும் அழுத்தம் காரணமாக மக்குவதன் மூலம் உண்டாகக்கூடிய ஒரு வாயு ஆகும்.

2. இயற்கை எரிவாயு பொதுவாக பெட்ரோலிய பகுதிகளுடன் இணைந்து காணப்படுகிறது.

3. இது வெப்பப்படுத்தலுக்கும், சமையலுக்கும் மின் உற்பத்திக்கும் வாகனங்களுக்கு எரிபொருளாகவும் விளங்குகிறது

4) நிலக்கரியின் வகைகளை அதன் கரிம அளவுகளுடன் குறிப்பிடுக

**பதில் :** **நிலக்கரி:**

1. நிலக்கரி என்பது எளிதில் எரியக்கூடிய உயிரின படிமங்கள் கொண்ட ஒரு நீரக தனிமம் ஆகும். இது படிவுப் பாறைகளில் கிடைக்கிறது.

2. நிலக்கரி ஒரு நாட்டின் தொழிற்சாலை வளர்ச்சிக்கு மிக இன்றியமையாததாக இருப்பதால் இது 'கருப்பு தங்கம்' (Black gold) என அழைக்கப்படுகிறது.

**வகைகள்**

**கரிம அளவு**

i. ஆந்தரசைட் : 80 முதல் 90 சதவீதம்.

ii. பிட்டுமினஸ் : 60 முதல் 80 சதவீதம்.

iii. பழுப்பு நிலக்கரி : 40 முதல் 60 சதவீதம்.

iv. மரக்கரி : 40 சதவீதத்திற்கும் குறைவு.

5) இந்தியாவில் சணல் உற்பத்தி செய்யும் முக்கிய பகுதிகளைக் குறிப்பிடுக

**பதில் :** 1. சணல் உற்பத்தி பகுதிகள் மேற்கு வங்கத்தில் உள்ள ஹுக்ளி ஆற்றங்கரை நெடுகிலும் அமைந்துள்ளது.

2. டிட்டகார், ஜகட்டட், பட்ஜ் - பட்ஜ், ஹவுரா மற்றும் பத்ரேஸ்வர் ஆகியன முதன்மை சணல் பொருள்கள் உற்பத்தி மையங்களாகும்.

3. ஆந்திரப்பிரதேசம், பீகார், அசாம், உத்திரப்பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் ஒடிசா ஆகியன சணல் பொருள் உற்பத்தி பொருட்களின் பிற மாநிலங்களாகும்.

6) இந்தியாவின் முக்கிய எண்ணெய் உற்பத்தி பகுதிகளைக் குறிப்பிடுக

**பதில் : மேற்குக் கடற்கரையிலுள்ள எண்ணெய் வயல்கள்:**
1. பேஸ்ஸைம் எண்ணெய் வயல்
2. மும்பை ஹை
3. குஜராத் கடற்கரை
4. அங்கலேஸ்வர்
5. காம்பே-லூனி பகுதிகள்
6. அகமதாபாத் - கலோல் பகுதி

**கிழக்குக் கடற்கரையிலுள்ள எண்ணெய் வயல்கள்:**
1. பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு (அசாம்)
2. திக்பாய்
3. நாகர்காட்டியா
4. மோரான் ஹக்ரிஜன்
5. ருத்ரசாகர் - லாவா
6. சர்மா பள்ளத்தாக்கு
7. அந்தமான், நிகோபாரின் உட்பகுதிகள்
8. மன்னார் வளைகுடா
9. பலேஷ்வர் கடற்கரை

7) மாங்கனீசின் பயன்களைக் குறிப்பிடுக.

**பதில் : மாங்கனீசுவின் பயன்கள்:**
1. மாங்கனீசு இரும்பு எஃகு மற்றும் உலோக உற்பத்திக்கு அடிப்படையான மூலப்பொருள் ஆகும்.
2. வெளுக்கும் தூள், பூச்சிக் கொல்லிகள், வண்ணப்பூச்சுகள், மின்கலன்கள் போன்றவை தயாரிப்பதற்கு மாங்கனீசு பயன்படுகிறது.

8) ஆற்றல் வளங்கள் என்றால் என்ன? இது எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**பதில் :** 1) மின்சாரம் உற்பத்தி செய்ய பயன்படும் வளங்களை எரிசக்தி வளங்கள் என்று அழைக்கின்றோம்.
2) ஆற்றல் வளங்களை புதுப்பிக்கக் கூடிய வளம் மற்றும் புதுப்பிக்க இயலாத வளங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

9) பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் பற்றி எழுதுக.

**பதில் :** 1. இது இந்திய அரசாங்கத்தின் கீழ் இயங்கும் ஒரு அமைச்சகமாகும்.
2. இவ்வமைச்சகம் ஆய்வு செய்தல், உற்பத்தி, சுத்திகரித்தல், விநியோகம் இறக்குமதி, எண்ணெய் பாதுகாப்பு, இயற்கை எரிவாயு மற்றும் பெட்ரோலிய உற்பத்திப்பொருள் போன்றவற்றிற்க்கு பொறுப்பு ஏற்கிறது.

10) தொழிற்சாலைகள் என்றால் என்ன? அதன் வகைகளை விவரி.

**பதில் :** மூலப்பொருட்கள் இயந்திரங்களின் மூலம் உற்பத்தி பொருட்களாக மாற்றப்படும் இடங்கள் தொழிலகங்கள் என்று பெயர்.
மூலப்பொருட்களின் ஆதாரங்களின் அடிப்படையில் தொழிலகங்கள் மூன்று வகையாக வகைப்படுத்தப்படுகிறது.
1) வேளாண் சார்ந்த தொழிலகங்கள்
2) காடுகள் சார்ந்த தொழிலகங்கள்
3) கனிமம் சார்ந்த தொழிலகங்கள்

11) இந்தியாவின் முக்கிய மென்பொருள் மையங்கள் யாவை?

**பதில் :** சென்னை, கோயம்பத்தூர், திருவனந்தபுரம், பெங்களூரு, மைசூரு, ஹைதராபாத், விசாகப்பட்டினம், மும்பை, பூனா, இந்தூர், காந்திநகர், ஜெய்ப்பூர், நொய்டா, மொகாலி மற்றும் ஸ்ரீநகர் இந்தியாவின் முக்கிய மென்பொருள் மையங்களாகும்.

12) புதுப்பிக்கக்கூடிய மற்றும் புதுப்பிக்க இயலாத வளங்களைப் பட்டியலிடுக.

**பதில் :** புதுபிக்கக்கூடிய வளங்கள்

1. சூரிய ஆற்றல்
2. காற்று சக்தி
3. உயிரி வளம்
4. ஓத சக்தி
5. அலை சக்தி

புதுப்பிக்க இயலாத வளங்கள்

1. நிலக்கரி
2. பெட்ரோலியம்
3. இயற்கை வாயு

13) இந்தியாவில் காணப்படும் மதிப்புமிக்க உலோகங்கள் யாவை?

**பதில் :** 1. பாக்சைட்

2. இரும்பு
3. மாங்கனீசு
4. நிக்கல்
5. துத்தநாகம்
6. காரீயம்
7. தங்கம்
8. தாமிரம்

14) இந்தியாவிலுள்ள அணுமின் நிலையங்களைக் குறிப்பிடுக.

**பதில் :** 1. தாராப்பூர் - மும்பை

2. கோட்டா - இராஜஸ்தான்
3. கல்பாக்கம் - தமிழ்நாடு
4. கூடங்குளம் - தமிழ்நாடு
5. நரோரா - உத்திரப்பிரதேசம்
6. கைகா - கர்நாடகா
7. காக்கரபாரா - குஜராத்

15) இந்தியாவின் முக்கிய மென்பொருள் நிறுவனங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

**பதில் :** 1. டாடா கன்சல்டன்சி சர்வீசஸ்

2. ஐ-பிளக்ஸ்
3. அசெஞர்
4. காக்னிசன்ட்
5. எல் & டி
6. இன்போடெக்
7. கேலக்ஸி சொல்யுசன்ஸ்
8. ஐடிசி

## 5 மதிப்பெண் வினாக்கள்

4 x 5 = 20

16) இந்தியத் தொழிலகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் பற்றி எழுதுக.

**பதில் :** 1. மின் பற்றாக்குறை மற்றும் சீரற்ற மின் வினியோகம்.

2. தொழிலகங்கள் நிறுவுவதற்கேற்ற பரந்த நிலப்பரப்பு இல்லாமை
3. கடன் பெறுவதிலுள்ள நடைமுறை சிக்கல்கள்
4. கடனுக்கான அதிக வட்டி விகிதம்
5. மலிவான ஊதியத்திற்கு வேலையாட்கள் கிடைக்காமை
6. ஊழியகர்களுக்கான தொழில்நுட்ப மற்றும் தொழிற்முறை பயிற்சிகள் இல்லாமை
7. தொழில்பேட்டைகளுக்கருகில் வசிப்பதற்கு ஏற்ற சூழல் இல்லாமை

17) இந்தியாவில் உள்ள பருத்தி நெசவாலைகளின் பரவல் பற்றி எழுதுக.

**பதில் : இந்திய பருத்தி நெசவாலைகள்:**

1. பருத்தி நெசவாலைகள் நம் நாட்டின் அதிக வேலை வாய்ப்பை அளிக்கும் ஆதாரங்களில் ஒன்றாக உள்ளது.

2. தற்போது இந்தியா, பருத்தி உற்பத்தியில் உலகின் மூன்றாவது பெரிய நாடாகவும் தறிகளிலும், நூற்பு கருவிகளின் எண்ணிக்கையிலும் முதன்மையான நாடாகவும் உள்ளது.

3. தற்போது பருத்தி நெசவாலைகள் இந்தியாவின் மிகப்பெரிய நவீன தொழிலகப் பிரிவாக உள்ளது.

**பருத்தி நெசவாலைகளின் பரவல்:**

1. மகாராஷ்டிரம், குஜராத், மேற்கு வங்காளம், உத்திரப்பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் பருத்தி நெசவாலைகள் செறிந்து காணப்படுகின்றன.

2. தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், கரூர், சென்னை, திருநெல்வேலி, மதுரை, தூத்துக்குடி, சேலம், மற்றும் விருதுநகர் ஆகியன முக்கிய நெசவாலை நகரங்களாகும்.

**மும்பை-இந்தியாவின் மான்செஸ்டர்:**

1. மும்பை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் பருத்தி நெசவாலைகள் செறிந்து காணப்படுவதால் மும்பை, இந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படுகிறது.

2. இதற்குக் காரணம் மகாராஷ்டிரா மாநிலத்தில் காணப்படும் கரிசல் மண், ஈரப்பதக்கால நிலை, மும்பைத் துறைமுகம், எளிதில் கிடைக்கும் நீர்மின்சக்தி, சந்தை வசதி மற்றும் சிறந்த போக்குவரத்து வசதி ஆகியனவாகும்.

**கோயம்புத்தூர்-தென்னிந்தியாவின் மான்செஸ்டர்**

1. தமிழ்நாட்டிலுள்ள கோயம்புத்தூரில் அதிக எண்ணிக்கையிலான பருத்தி நெசவாலைகள் உள்ளன.

2. இதனால் கோயம்புத்தூர் தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என அழைக்கப்படுகிறது.

18) ஹீக்ளி ஆற்று பகுதியில் சணல் தொழிலகங்கள் செறிந்து காணப்படுவதற்கான காரணிகளை விளக்குக.

**பதில் : ஹீக்ளி ஆற்று பகுதியில் சணல் தொழிலகங்கள் செறிந்து காணப்படுவதற்கான காரணிகள்:**

1. ஹுக்ளி ஆற்றுப் பகுதியில் சணல் பயிரிட உகந்த காலநிலை, மண்வளம் மற்றும் நீர்ப்பாசன வசதி போதுமான அளவு உள்ளது.

2. சணல், குறைவான விலையில் கிடைக்கக்கூடிய ஒரு இழைப்பயிர். இம்மூலப்பொருள் ஹுக்ளி ஆற்றுப்பகுதிகளில் அதிகமாகப் பயிரிடப்படுகின்றது.

3. ஆலைக்குத் தேவையான மலிவான தொழிலாளர்கள் மேற்கு வங்காளம், பீகார், ஒடிசா போன்ற மாநிலங்களிலிருந்து கிடைக்கின்றனர்.

4. சாலைப்போக்குவரத்து, ரயில் போக்குவரத்து ஹுக்ளி ஆற்றுப்பகுதியோடு இணைக்கப்பட்டுள்ளன.

5. கொல்கத்தா துறைமுகம் அருகில் அமைந்துள்ளதால் குறைந்த செலவில் பொருட்களை துறைமுகத்திற்கு எடுத்துச் செல்லவும், ஏற்றுமதி செய்யவும் வசதியாக உள்ளது.

6. வங்கிகள் மற்றும் காப்புறுதி நிறுவனங்கள் போன்ற வசதிகளையும் இப்பகுதி பெற்றுள்ளது.

7. தொழிற்சாலைக்குத் தேவையான நீர் ஹுக்ளி நதியிலிருந்து கிடைக்கிறது.

19) காகிதத் தொழிற்சாலைப் பற்றி விரிவாக கூறவும்.

**பதில் :** 1) காகிதத் தொழிற்சாலை இந்தியாவில் பரவலாக்கப்பட்ட மற்றும் தனித்துவம் வாய்ந்த தொழிற்சாலையாக உருவெடுத்துள்ளது.

2) காகித தாள்கள், காகித அட்டை பெட்டிகள், மெல்லிலை தாள்கள், காகித பைகள், எழுதுபொருட்கள் உரைகள் மற்றும் அச்சிடப்பட்ட காகித பொருட்களான புத்தகங்கள், பத்திரிக்கைகள் மற்றும் நாளேடுகள் ஆகிய பொருட்கள் காகிதத் தொழிற்சாலை மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன.

3) உயர்தர அச்சுதாள்கள் மற்றும் செய்தித்தாள் உற்பத்திக்கு மென் மரங்கள் மூலப் பொருட்களாக பயன்படுகின்றன.

4) காகித பயன்கள் கல்வி மற்றும் கல்வி சார்ந்த பயன்பாட்டிற்கும் சமுதாயத்தின் ஒட்டு மொத்த நல வாழ்வினை அளவிடும் கருவியாக உள்ளது.

5) முதன் முதலில் இந்தியாவில் ராயல் பெங்கால் காகிதத் தொழிற்சாலை கொல்கத்தாவிற்கு அருகில் உள்ள பாலிகஞ்ச் என்னும் இடத்தில் 1867 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

6) அடுத்ததாக 1879 ஆம் ஆண்டு லக்னோவிலும், 1882 ஆம் ஆண்டு திட்டகாரிலும், 187 ஆம் ஆண்டு பூனாவிலும், 1892 ஆம் ஆண்டு ராணிகஞ்சிலும், 1892 கன்கின்றாவிலும், 1918 ஆம் ஆண்டு நைகாத்திலும் காகிதத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன.

7) மரக்கூழ், மூங்கில், சலாய் மற்றும் சவாய் புற்கள், உபயோகப்படுத்தப்பட்ட காகிதங்கள் கரும்புசக்கை போன்றவை காகிதத் தொழிற்சாலைக்கு தேவையான மூலப்பொருட்கள் ஆகும்.

8) மேற்கு வங்காளம் இந்தியாவில் காகித உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலமாகும்.

9) மத்திய பிரதேசம், ஒரிசா, தமிழ்நாடு போன்றவை காகித உற்பத்தியில் குறிப்பிடத்தக்க மாநிலங்களாகும்.